# என்னுடைய பொக்கிஷத்தைக் கண்டுகொண்டேன்

(Karoon Ka Khazana)

முனைவர்,சோகன்லால் 9 வருடங்களுக்கு முன்பு ஓய்வு பெற்ற ஒரு மேலாண்மைத்துறைப் பேராசிரியர். ஒருநாள் அவர் ஒளிரும் முகபாவத்துடன் தம்முடைய நண்பருடன் இவ்வாறு பகிர்ந்துகொண்டார். நான் என்னுடைய எழுபதாவது வயதில் என்னை மகிழ்ச்சிப்படுத்தக்கூடிய விஷயத்தினைக் கண்டுகொண்டேன், அது நான் சங்கீதம் கற்றுக் கொள்வதாகும். நான் என்னுடைய மீதி வாழ்நாளைச் சந்தோஷமாகக் கழிப்பதற்கு உதவியாக இருக்கும்".இதைக் கேட்டு அவர் நண்பர் மிகவும் ஆச்சரியமடைந்தார்.

ஓய்வுக்குப்பின் முனைவர். சோஹன்லால் உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. பலவீனமான, மற்றும் கிட்டத்தட்ட படுக்கையில்/வீட்டிற்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த அவர், பத்துக்கும் மேற்பட்ட நோய்களின் வலி மற்றும் பிற பக்க விளைவுகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்ப, இந்தியச் சூழலில் தொடர்புடைய தமது அனுபவங்களை எழுதத் தொடங்கினார். அவர் வெளியீட்டிற்காக எழுதவில்லை, ஆனால் சில டஜன் புத்தகங்கள் முடிந்ததும், இந்த முதல் அனுபவ அடிப்படையிலான படைப்புகளை மேலாண்மை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணிபுரியும் மேலாளர்களுக்கு மலிவு விலையில் பரப்ப நினைத்தார். இந்திய வணிகச் சூழலில், அதிக விலைக்கு "திடமான" தடிமனான புத்தகங்களை மொத்தமாக விற்பனை செய்வதில் ஆர்வமாக இருந்த கல்வி வெளியீட்டாளர்களின் செயல்களால் கோபமடைந்தார்.

அவர் ஆன்-லைன் விற்பனையின் வழியைக் காண முயனறார், ஆனால் அங்கு கூடப் புகழ்பெற்ற விற்பனையாளர்களின் அக்கறை, புனைகதை மற்றும் வாழ்க்கை வரலாற்றுப் படைப்புகளில் அதிகமாக இருந்தது, மேலும் அவர் உருவாக்கிய இலக்கியங்களில் அவ்வளவாக இல்லை. புகழ்பெற்ற கூரியர் சேவை வழங்குநருடன் அவரது பதிப்பகதாரால் ஈடுபடுத்தப்பட்ட அனுபவம் மிகவும் ஏமாற்றம் அளித்தது.. அந்நிறுவனம் சரியான நேரத்தில் புத்தகங்களை வழங்கவில்லை மற்றும் டெலிவரிகளில் போலிக் கையெழுத்தைக் காட்டினர். இது போன்ற மூன்று நிகழ்வுகள் நடந்தபோது டாக்டர் சோஹன்லால் அவர்களை நம்புவதை நிறுத்திவிட்டார், மேலும் அவர் வாங்கிய மற்றும் வெளியீட்டிற்கு அனுப்ப விரும்பிய புத்தகங்களை மீட்டெடுக்க முடியவில்லை.

பின்னர் அவர் மின்-புத்தகங்களை முயற்சித்தார், இது அச்சிடப்பட்ட புத்தகங்களை விடப் பல நன்மைகளைக் கொண்டிருந்தது: எளிதாக வாங்குதல், செலவுகளில் வியத்தகு குறைப்பு, சரியான நேரத்தில் விநியோகம், தேவைப்படுபவர்களுக்கு இலவசப் பரிசு, படிக்கும் வசதி (எந்த இடத்திலும், உலகில் எந்தப் பகுதியிலும்) சுமந்து செல்வதில் எளிமை, வகுப்பில் பகிர்தல், தனிப்பயனாக்கப்பட்ட பாடப் பொருள் மேம்பாடு மற்றும் பலவாகும். ஆனால் உள்ளூர் விற்பனையாளர்களால் வழங்கப்பட்ட வலைத்தளங்கள் ஏற்பட்ட அனுபவங்கள் மிக கசப்பானதாக இருந்தது. அடிக்கடி செயல்இழப்புகள் ,சரிவர பதிலளிக்காதது மற்றும் காப்புப்பிரதி இல்லாத தரவுகளின் செயலிழப்பு அவரை மோசமாக வீழ்த்தியது. அலுவலகம், உதவியாளர்கள் அல்லது ஆதரவுச் சேவை மற்றும் அவரது

வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத்தில் இருந்து அனைத்திற்கும் நிதியுதவி இல்லாததால், இவை அனைத்தும் தாங்க முடியாததாகவும் வெறுப்பாகவும் மாறியது.

ஒரு நாள், கடுமையான விரக்தியால், அவர் இவற்றையெல்லாம் விட்டுவிட்டுப் புனித யாத்திரை செல்ல நினைத்தார்: சார்தாம் யாத்திரை மற்றும் 12 ஜோதிர்லிங்க தரிசனம் ஆகியவற்றை மேற்கொள்ளநி னைத்தார். மூன்று மாதங்களில் (ஜூலை-அக்டோபர் 2019) அவர் தெலுங்கானா, மகாராஷ்டிரா, ஜார்கண்ட் மற்றும் உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள 6 புனிதத் தலங்களுக்குச் சென்றார், இது கற்பனைக்கு எட்டாதது, ஏனெனில் அவரும் அவருடைய மனைவியும் ஒரு மணி நேரச் சாலைப் பயணத்தைக் கூட செய்ய முடியாமல் பல்வேறு வகையான சிரமங்களை எதிர்கொண்டனர். திரும்பும் போது அதே கேள்வி அவரைத் தொந்தரவு செய்தது, "அவர் முயற்சி செய்து கொண்டிருந்ததையெல்லாம் நிறுத்திவிட்டு அவரது வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கவேண்டுமா?" என்று யோசித்தார். "அப்படியானால், அவர் இதுவரை செய்யாத முயற்சிகள் எவை? அவற்றில் எப்படி ஈடுபட வேண்டும்?"

மூன்று மாத யாத்திரையின் போது ஒரு அசாதாரண நிகழ்வு நிகழ்ந்தது. டாக்டர். சோஹன்லாலுக்கு புகழ்பெற்ற இந்திய பாடகியான லதா மங்கேஷ்கரை அவரது 90வது பிறந்தநாளில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆறு மாதங்களுக்கு முன்பு இறந்து போன அவரது மூத்த சகோதரிக்கு இளமையில் லதாவின் பாடல்கள் மிகவும் பிடிக்கும். அவற்றை எப்போதும் முணுமுணுத்துக் கொண்டே இருப்பார் .டாக்டர். சோகன்லாரின் சகோதரி அவரை சில பாடல்களைப் பாடச் சொல்லி கேட்பார் ஆனால் அவரது குரல் அதை ஆதரிக்கவில்லை. .அவர் லதாதாயின் பாதங்களைத் தொட்டபோது, ஏதோ நடந்தது, ஏமாற்றமளிக்கும் அனைத்தையும் விட்டுவிட்டு இசையைக் கற்கத் தொடங்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது: அதனால் அவரது குரல் ஆதரிக்காததை, ஏதாவது கருவியில் இசைக்க முயற்சி செய்யலாம் என்று நினைத்தார்.

வீடு திரும்பிய அவர், ஸ்பெயினில் (வீட்டில் தனது தனிமையை போக்குவதற்காக) வாங்கிய 28 வயது கேசியோவைத் எடுத்து தூசிதட்டிவைத்தார். அவர் ஒரு கல்விப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் ஸ்பெயினுக்குச் சென்ற போது ஒன்பது மாதங்கள் அங்கு இருந்தார் அப்போது வாங்கிய கேசியோவை அவரால் பயன்படுத்த முடியவில்லை நேரமின்மை ,நிர்வாக மற்றும் குடும்பச்சுமைகள் காரணமாக அவரால் அந்த இசைக்கருவியைப் பயன்படுத்தமுடியவில்லை.

கேசியோவில் உள்ள சில விசைகளை முதலில் அங்கும் இங்கும் அழுத்த முயன்றார் ஆனால் சில வாரங்களுக்குப் பிறகு ஒரு பாடலின் முழுவரியையும் இசைக்கக் கற்றுக் கொண்டார்.இதனால் அவர் ஒரு குழந்தையைப் போல் பரவசமடைந்தார் ஆனால் அதற்கு மேல் எதுவும் நடக்கவில்லை .எனினும் மெதுவாக அவர் வரிக்குவரி கேசியோவை இசைக் ககற்றுக்கொண்டார் .பின்னர் அவர் இசைத்த இசைதுணுக்குகளை ஆன்லைனில் ஒன்று சேர்க்கவும் தொடங்கினார், இவை அவரது மகிழ்ச்சிக்கு உதவின.

இருப்பினும், அவர் மார்ச் 2020-இல் குர்கானில் தமது மகள் வீட்டிற்குச் சென்ற போது, கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக லாக்டவுனில் சிக்கினார். அங்கு அவரது பேத்தியின் கேசியோ ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அவர் அதில் விளையாடத் தொடங்கினார், ஒரு நாள், துல்லியமாக ஏப்ரல் 14--ஆம் தேதி, அவர் தமது வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு முழுப் பாடலை ஒரே நீட்டிப்பில் இசைக்க முடிந்தது.

அது நடந்தது எப்படி? அவர் ஆச்சரியப்பட்டார். இடைவேளை மற்றும் ட்ரையல் இருந்தாலும் ஒரு முழுப் பாடலை எப்படி அவரால் இசைக்க முடிந்தது. அவர் அவற்றைப் பதிவு செய்து ஆன்லைனில் ஆடியோ கோப்பாக இணைக்கத் தொடங்கினார். பல பாடல்களுக்குக் கச்சாப் பதிப்புகள் வர ஆரம்பித்தன. கடினமான விரல்கள் மற்றும் பலவீனமான நினைவாற்றல் கொண்ட ஒரு முதியவர் எந்த வழிகாட்டியோ அல்லது ஆதரவோ இல்லாமல் முழுப் பாடல்களின் ட்யூன்களைக் கண்டுபிடித்து இசைப்பது எப்படி? என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்படி? எப்படி? எப்படி? அதை நினைத்துப் பார்க்கையில் அவர் மேலும் மேலும் குழப்பமடைந்தார்.

அவர் உருவாக்கிய மற்றும் இன்னும் வளர்ந்து வரும் இலக்கியங்களைப் பரப்புவதற்காக, ஒரே நேரத்தில் அவர் தமது சொந்த வலைத்தளங்களின் (ஒரு தசாப்தத்திற்கு முன்பு அவர் தொடர்பை இழந்த தலைப்பு) வடிவமைப்பைக் கற்றுக் கொண்டார், ஹோஸ்ட் செய்து இயக்குகிறார் என்பது இன்னும் திருப்தி அளிக்கிறது. அவர் எதிர்கொண்ட சிரமங்களைச் சமாளிக்க ஒரு ஹோம் வெப்சர்வரை உருவாக்க நினைத்தபோது அவர் மகிழ்ச்சியில் துள்ளிகுதித்தார். அதனுடன், அவர் தமது இலக்கியத்தின் ஆடியோக்கள் மற்றும் வீடியோக்களை உருவாக்கினார், அங்குமிங்கும் இசையைக் கலக்கினார், அதன் விளைவாக பல புதுமையான துண்டுகள், வெவ்வேறு ஆடியோ / வீடியோக்களின் பாடல்கள் மற்றும் படங்களின் கலவை, சில அறிமுக வீடியோக்களை உருவாக்குதல் மற்றும் அவரது மேலாண்மை, பாடத்தை இசை ரீதியாக கற்றுக் கொள்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் உதவியது..

74+ வயதிலும், தன்னிடம் உள்ள சிறிய வளங்களோடு, முற்றிலும் மாறுபட்ட இந்தப் புதிய விஷயங்களை எப்படிக் கற்றுக்கொள்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளக் கூகுளில் தேடும் போது, மனித மூளையின் செயல்பாடுகள் குறித்த சிறு சிறு தகவல்களை அவர் கண்டார் .நியூரான்கள், டென்ட்ரைட்டுகள் மூலம சராசரியாக ஒரு மனிதனின் மூளை 100 டிரில்லியன் ஒத்திசைவுகளை உருவாக்கும் திறன் கொண்டது., சராசரி மனிதர் ஒருவர் தம்முடைய அறுபது வயதைப் பூர்த்திசெய்யும் பொழுது, மூளை இந்த ஆற்றலில் 30%-க்கு மேல் பயன்படுத்துவதில்லை என்றும், புதிய நினைவக ஒத்திசைவுகளை உருவாக்கும் திறன் நபரின் உயிரியல் வயதில் குறையாது என்றும் குறிப்பிடுவது இன்னும் உற்சாகமானது.

அவர் தமது வாழ்க்கையின் பிளாட்டினம் ஜூபிலியை நிறைவு செய்தாலும், அவருடைய பயன்படுத்தப்படாத சாத்தியமான ஒத்திசைவுகளில் மூன்றில் இரண்டு பங்கு அப்படியே இருந்தாலும், கடந்த காலத்திலிருந்து வேறுபட்ட புதிய விஷயங்களைக்

கற்றுக்கொள்ள முடியும் என்று அர்த்தமா? அறிவியல் மற்றும் மருத்துவ உண்மைத்தன்மை இருந்த போதிலும், தமது பொக்கிஷத்தைக் கண்டு கொண்டதில் மகிழ்ச்சி அடைந்தார். முனைவர்.சோகன்லால் வாழ்க்கையின் இறுதி வரை மகிழ்ச்சியாக இருப்பதற்காக ஒரு குழந்தையைப் போல் புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டார்.